**பல்கலைக்கழக ஓய்வூதிய நிதியம் - 2017**

-------------------------------------------------------------------

பல்கலைக்கழக ஓய்வூதிய நிதியத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 12 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 12(5) ஆம் உபபிரிவின் பிரகாரம் நிதியத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தினால் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

நிதிக்கூற்றுக்களானவை, பல்கலைக்கழக ஓய்வூதிய நிதியத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

எதிர்வரும் ஆண்டில் முதிவடைவதற்கு இருந்த ரூபா 675 மில்லியனான நிலையான வைப்புக்களின் பெறுமதி குறுங்கால முதலீடுகளாக கருதி நிதி நிலைமைக்கூற்றில் நடைமுறைச் சொத்துக்களின் கீழ் உள்ளடக்கப்பட வேண்டிய போதிலும் அது நீண்டகால முதலீட்டின் கீழ் நடைமுறையல்லாத சொத்துக்களாக காண்பிக்கப்பட்டிருந்தது.

### 2.3 கணக்காய்விற்கு சான்றுகளின்மை

குறுங்கால வைப்புக்களில் (Repo) முதலீடு செய்யும் போது மிகவும் செயற்திறனான வட்டி வீதமொன்று அடிப்படையில் முதலீடு செய்வதற்காக உரிய நிதி நிறுவனங்களிலிருந்து கோரல் இடம் பெற்றதன் பின்னர் அவ் வட்டி வீதம் கருத்தில் கொள்ளப்பட்டு முதலீடு தீர்மானிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 5,073 மில்லியனான 71 முதலீட்டு சந்தர்ப்பங்களுக்கு உரிய நிதி நிறுவனங்களிடமிருந்து போட்டி வட்டி வீதம் கோரப்பட்டமைக்கான சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்காக நிதியத்தின் நிதி விளைவுகள் ரூபா 701,008,810 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 573,079,624 ஆனமையால் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 127,929,186 தொகையான அதிகரிப்பொன்று தென்பட்டது. முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது தேறிய முதலீட்டு வருமானம் ரூபா 139,482,388 ஆல் அதிகரித்தமை மேற்படி அதிகரிப்பிற்கு பிரதான காரணமாக இருந்தது.

மீளாய்வாண்டினதும் கடந்த 4 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2013 ஆண்டிலிருந்து 2017 ஆம் ஆண்டு வரை நிதி விளைவுகளில் படிப்படியான அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. அரசிற்கு செலுத்திய வரியை சீராக்கல் செய்த போது 2013 ஆண்டின் போது ரூபா 455,045,869 ஆன பங்களிப்பு 2014 ஆண்டின் இறுதியளவில் ரூபா 723,048,413 வரை அதிகரித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 செயற்பாடு மற்றும் மீளாய்வும்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1999 யூன் 10 ஆந் திகதிய 747 ஆம் இலக்க பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு சுற்றறிக்கையின் முதலாவது பிரிவின் பிரகாரம் 1999 செப்தெம்பர் 01 ஆந் திகதி முதல் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு மற்றும் அதன் கீழ் காணப்படும் சகல பல்கலைக்கழகங்களின் நிரந்தர சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்யப்படும் சகல ஊழியர்களும் ஓய்வூதிய நிதியத்தில் கட்டாய உறுப்பினர்களாக எனவும் ஓய்வூதியத்திற்கு அங்கத்துவம் பெற்றுக்கொண்ட ஊழியருக்கு மீண்டும் பின்னைய காலத்தில் தமது தீர்மானத்தை மாற்றி ஓய்வூதியத்திலிருந்து விலகி சேமலாப நிதியத்திற்கு அங்கத்துவத்தை கோரமுடியாதென குறிப்பிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அச் சுற்றறிக்கையின் 4.1 பிரிவினை திருத்தி பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட 2016 திசெம்பர் 16 ஆந் திகதிய 12 ஆம் இலக்க சுற்றறிக்கை கடிதத்தின் மூலம் ஓய்வு பெறும் போது 20 வருடங்களை பூர்த்தி செய்யாத அவர்களுக்கு அவர்களின் வேண்டுகோளின் பேரில் ஓய்வூதிய நிதியத்தின் தமது மீதிகளை பல்கலைக்கழக சேமலாப நிதியத்திற்கு மாற்றுவதற்கு இடமளிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியில் ஓய்வூதிய நிதியத்தின் 90 பங்களிப்பாளர்கள் தமது ஓய்வூதிய பங்களிப்பான ரூபா 40,110,697 தொகையை சேமலாப நிதியத்திற்கு மாற்றப்பட்டிருந்தது. இந் நிலைமை நிதியம் எதிர்காலத்தில் தொடர்ந்தியங்குவதற்கு பாதகமாக தாக்கமளிக்கும் என அவதானிக்கப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதி வரையில் ஓய்வூதிய நிதியத்தின் உறுப்பினர்கள் 14,442 ஆக இருந்ததுடன் அதில் செயற்பாட்டில் இல்லாத உறுப்பினர்களின் எண்ணிக்கை 1,856 ஆக இருந்தது. ஓய்வூதியம் பெறும் 252 உறுப்பினர்களுக்கு இடையே 53 பேரின் தனிப்பட்ட கணக்குகளில் மீதிகள் காணப்படவில்லையெனினும் மீளாய்வாண்டில் அவர்களுக்கு ஓய்வூதியமாக கொடுப்பனவு செய்யப்பட்ட தொகை ரூபா 8,229,530 ஆக இருந்தது.

(இ) 2013 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக 2017 ஆம் ஆண்டில் நிதியத்தின் அதிகரிப்பு 28 சதவீதம் முதல் 21 சதவீதம் வரை வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்ட போதிலும் ஓய்வூதியம் பெறும் அங்கத்தவர்களின் உறுப்பினர்களின் எண்ணிக்கை 2013 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரை 149 முதல் 252 வரை அதிகரித்திருந்தது. அவ்வாறே அவர்களுக்கு செலுத்தப்பட்ட ஓய்வூதிய பெறுமதி ரூபா 27 மில்லியன் முதல் ரூபா 51 மில்லியன் வரை அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. நிதியத்தின் அதிகரிப்பு வீழ்ச்சியடைந்திருந்த போதிலும் ஓய்வூதியமாக செலுத்தப்பட்ட பெறுமதி தொடர்ந்தும் அதிகரித்த போக்கொன்றை கொண்டிருந்தமை இதன் பிரகாரம் அவதானிக்கப்பட்டது.

### 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) காசேடு பேணப்பட்டு செல்லும் போது ஒவ்வொரு மாத இறுதியிலும் வரவு மீதியொன்று இல்லாமல் செலவு மீதியொன்றாக அவதானிக்கப்பட்டது. இதன் காரணமாக நிதி தொடர்பான உள்ளக கட்டுப்பாடு பலவீனமானமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) 1996 சனவரி 03 ஆந் திகதி அமைச்சரவை கூட்டத்தின் போது 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் கீழ் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் மூலம் நிர்வகிக்கப்படும் ஓய்வூதிய முறைமையொன்று தாபிக்கப்பட வேண்டுமென்ற முன்மொழிவின் பேரில் இந்த ஓய்வூதிய முறைமை 1999 யூன் 10 ஆந் திகதிய 747 ஆம் இலக்க ஆணைக்குழு சுற்றறிக்கையை அடிப்படையாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டு பேணப்பட்டு செல்லப்பட்டிருந்தது. 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 97 ஆம் பிரிவின் பிரகாரம் ஓய்வூதிய நிதியத்தை முறைமைப்படுத்துதல், நிருவகித்தல் மற்றும் அதன் முகாமைத்துவத்திற்காக ஆணைக்குழுவினால் வழிகாட்டியொன்று தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வழிகாட்டி தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்டிருக்கவில்லை.

(இ) ஓய்வூதிய நிதியத்தின் எதிர்கால பாதுகாப்பிற்காக ஓய்வூதிய நிதியத்தின் உறுப்பினர்களின் ஆயுட் கணிப்பீட்டு மதிப்பீடு (Actuarial Valuation) ஒன்றிற்காக 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளின் போது ரூபா 365,000 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. இது தொடர்பான மதிப்பீட்டு அறிக்கை 2013 ஒக்தோபர் 01 ஆந் திகதி மற்றும் 2014 மார்ச் 26 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பாக தொடர் நடவடிக்கை இது வரை நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டின் 02 சந்தர்ப்பங்களில் ரூபா 250 மில்லியன் கூட்டுத்தொகையான திறைசேரி பிணை முறிகளில் நிதியத்தின் பணத்தை முதலீடு செய்வதற்காக முதலீட்டு குழுவின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த போதிலும் நிதியத்திலிருந்து திறைசேரி பிணை முறிகளில் ரூபா 50 மில்லியன் மாத்திரம் முதலீடு செய்யப்பட்டிருந்தது. இதற்காக தெரிவு செய்யப்பட்ட ‘‘நிதிய முகாமையாளர்’’ (Fund Manager) இடமிருந்து ரூபா 50 மில்லியனுக்கு மாத்திரம் முதலீட்டுக் கேள்வி சமர்ப்பிக்கப்படாமையால் இந்நிலைமை உருவான போதிலும் மாற்று முதலீட்டு முகாமையாளரால் சமர்ப்பிக்கப்பட்ட கேள்வி தொடர்பில் முகாமைத்துவத்தின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் குறைபாடுகள் அவ்வப்போது நிதியத்தின் செயலாளரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்பு | | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) முதலீடு | | மிகை நிதியத்தை ஆகக் கூடிய விளைவுகளையேனும் வகையில் மாற்று முதலீட்டு வழியில் முதலீடுகளில் ஈடுபடுத்தாமை. |
| (ஆ) நிதியக் கட்டுப்பாடு | (i) | ஓய்வூதிய நிதியத்தை தொடர்ச்சியாக பேணிச் செல்லக் கூடிய வகையில் ஆணைக்குழு தீர்மானங்களை செயற்படுத்தாமை. |
| | (ii) | நிதியத்தின் உறுப்பினர்களின் ஆயுள் கணிப்பில் மதிப்பீடொன்று மேற்கொண்டு நலன்களை மீளாய்வு மற்றும் ஓய்வூதிய முறைமையில் ஏதேனும் திருத்தங்கள் மேற்கொள்ளப்படாமை |